பதிவு எண்: எ. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: வைகாசி 30 (12—6—68) புதன் ★ வெளியூர்: வைகாசி 31 (13—6—68) வியாழன் [இதழ்: 300

தென்காசி இடைத் தேர்தல் --- நேரடிப் போட்டி

நெல்லை, சூன் 12—

தென்காசித் தொகுதிச் சட்டமன்ற இடைத் தேர்தலில் போட்டியிடுவதாக வேட்பு மனுத் தாக்கல் செய்திருந்த மூவரில் ஒருவர் இன்று தமது வேட்பு மனுவைத் திரும்பப் பெற்றுக்கொண்டார். சுயேச்சை வேட்பாளரான அவர் விலகிக் கொண்டதால், தி.மு.க.—காங்கிரசு வேட்பாளர்கள் இருவர் மட்டுமே நேரடியாகப் போட்டியிடுகின்றனர்.

தி மு.க. சார்பில் தோழர் க. மு. கதிரவன் போட்டியிடுவது தெரிந்ததே.

தமிழகத்தில் நடைபெற்ற இரத்தம் சிந்தாப் புரட்சி!

சமுதாயத்தில் ஒரு சாரார் அழுத்தப்பட்ட நிலை மாறிவிட்டது

எல்லோருக்கும் கல்வி சீராகக் கிடைக்க வழிசெய்யப்படுகிறது

அமைச்சர் செகசீவன் ராம் முன்னிலையில் முதலமைச்சர் அண்ணா விளக்கம்

சென்னை, சூன் 12—

"மத்திய அமைச்சர் செகசீவன் ராம், 'சமுதாயத்தில் ஒரு பகுதி அழுத்தப்பட்டு அவர்களுக்குக் கல்வி வசதி கிடைக்காமல் இருக்கிறது' என்றார். தமிழகத்தில் அப்படிப்பட்ட நிலைமை நீண்ட நாட்களுக்கு முன்பு இருந்தது. இங்கு நடந்த இரத்தம் சிந்தாப் புரட்சியின் மூலம் அந்த நிலைமை மாறிவிட்டது. இப்போது எல்லா சமுதாயத்தினருக்கும் சீரான கல்வி கிடைக்க வழிசெய்யப்படுகிறது.

"அரசாங்கத்தில் உள்ள அமைச்சர்களால் மட்டும் நல்ல சமுதாயத்தை உருவாக்க முடியாது. அதற்கு மக்கள் ஆதரவும் தேவை. தமிழகத்தைப் பொறுத்த வரையில் அந்த ஆதரவு இருக்கிறது. எனவேதான், இங்கு இலட்சக்கணக்கான ரூபாயைக் கல்விக்கே மக்கள் கவர்னரிடம் வாரி வழங்குகிறார்கள்"

இவ்வாறு முதலமைச்சர் அண்ணா அவர்கள், பள்ளிக்கூடங்களின் வளர்ச்சிக்குப் பொதுமக்கள் அளிக்கும் உதவித் திட்டத்தையொட்டி, சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் நடைபெற்ற பொருட்காட்சி விழாவில் கலந்துகொண்டு பேசுகையில் தெரிவித்தார்.

பொருட் காட்சியை மத்திய அமைச்சர் செகசீவன்ராம் திறந்து வைத்தார்.

விழாவுக்கு வந்திருந்தவர்களை கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் வரவேற்றார்.

விழாவுக்கு ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் தலைமை தாங்கினார்.

அவர் பேசுகையில், கல்விப் பிரச்சினை அரசையும், தனிப்பட்ட நிறுவனங்களையும் மட்டும் பொறுத்ததல்லவென்றும், பொதுமக்களுக்கும் அதில் கடமையிருக்கிறது என்றும் குறிப்பிட்டார்.

விழா மலரை, மத்திய அரசின் சமுதாயத்துறை துணை அமைச்சர் எம். எஸ். குருபாதசாமி வெளியிட்டார்.

பள்ளிக்கூட கல்வி இயக்குநர் எம். டி. பால், மேயர் டாகடர் அபிபுல்லா பேக், எஸ். பால கிருஷ்ண ஜோஷி, பி. ஹேமாவதி ஆகியோர் பேசினர்.

தமிழக உள்ளாட்சித் துறை அமைச்சர் மா முத்துசாமி நன்றி நவின்றார்.

முதலமைச்சர் அண்[illegible]

முதலமைச்சர் அ[illegible] கள் பேசுகையில் [illegible] தாவது:—

"தனிப்பட்ட நி[illegible] உதவிபுரிய முன்வந[illegible] ஆர்வத்துக்கும் — சாதனைக்கும் இடையேயுள்ள இடைவெளி எந்த அரசின் நிறுவனத்தாலும் நிறைவுசெய்ய முடியாது.

நாட்டின் வருங்காலத் தலைமுறையினரை உருவாக்குவதில் ஆசிரியர்களுக்குப் பெரும் பொறுப்பு உண்டு. ஆசிரியர்களிடம் மிகுந்த மதிப்பு இருந்தாலன்றி, நமது நாட்டில் கல்வி முறை வெற்றிபெற நாம் அதிகமாக உதவிசெய்ய முடியாது என்றே நினைக்கிறேன்.

பள்ளிக்கூடங்களின் பெயர் என்னவாகஇருந்தாலும் அவற்றின் தரம் உயர்ந்துகொண்டே இருக்க வேண்டும். இதற்கு ஆசிரியர்கள் காலத்திற்கு ஏற்ப நுட்பங்களைத் தெரிந்துகொள்ளவேண்டும். இதற்காக ஆசிரியர்கள் நாட்டில் சுற்றுப் பயணம் செய்து பல்வேறு கலாச்சாரங்களையும், மரபுகளையும் நேரில் தெரிந்துகொள்வது அவசியம்.

சமுதாயத்தின் ஒவ்வொரு பிரிவிலும் காணப்படும் ஆர்வம் தான் கட்டுப்பாடின்மைக்கும், கலவரங்களுக்கும் மூலகாரணமாகும். முன்னேற்றமடைந்த நாடுகளில் நடைபெறும் சம்பவங்களைப் பார்க்கும்போது, 'அவர்களைவிட நாம் மிகவும் கட்டுப்பாடாகவே இருக்கிறோம்' என்றே சொல்லுவேன்.

நாட்டின் நன்மைக்காக நமது வாழ்க்கை முறையைப் பாதுகாத்துக்கொள்வது அவசியமாகும்."

இரா. நெடுஞ்செழியன்

கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தமது வரவேற்புரையில், கடந்த பத்தாண்டுக் காலத்தில் 347 பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் நடைபெற்றிருப்பதாகவும், இத்திட்டத்தின் மூலம் ரூ. 10 கோடி மதிப்புக்குச் சீரமைப்பு நடைபெற்றிருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தின் வாயிலாக மட்டும் ரூ 83 இலட்சம் மதிப்புக்கு நன்கொடைப் பொருள்கள் கிடைத்திருப்பதாகவும் கூறினார்.

வடக்கேமூண்டுள்ள வகுப்புக் கலவரம்

13-பேர் பலி --- 40-பேருக்குக் காயம்

நாகபுரி, சூன் 11—

நாகபுரி சுற்று வட்டாரத்தில் உள்ள இரண்டு சேரிப் பகுதிகளில் நேற்றிரவு மூண்ட வகுப்புக் கலவரம் இன்று நகரம் முழுவதிலும் பரவியது.

இதனால், நள்ளிரவுவரை 13 பேர் உயிரிழந்திருக்கின்றனர்; நாற்பதுக்கு மேற்பட்டவர்கள் காயமடைந்திருக்கின்றனர்.

தீவைப்பு—சூறையாடல்களினால் நூற்றுக்கணக்கானோர் வீடிழந்து தவிக்கின்றனர்.

ஏழை--பணக்காரர் என்ற வேறுபாடு கல்வி பயிலுவதிலுமா?

மத்திய அமைச்சர் மனவேதனை

வேறுபாட்டைக் களைய முயலுவதாக முதலமைச்சர் அண்ணா உறுதி

"ஏழைப் பிள்ளைகள் கல்வி பயில மாநகராட்சிப் பள்ளிகளும், வசதிபடைத்தவர்கள் வீட்டுப் பிள்ளைகளுக்கெனத் தனியே பொதுப் பள்ளிகளும் இருப்பது இந்த நாட்டில் சோஷலிச சமுதாயம் அமைய உதவாது"

என்று, மத்திய உணவு அமைச்சர் திரு. செகசீவன்ராம் அவர்கள் கருத்தறிவித்தார்.

நகரில் உள்ள பள்ளிகளின் வளர்ச்சிக்காகப் பொதுமக்களால் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ள பொருள்களின் கண்காட்சியை பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் திறந்து வைத்துப் பேசுகையிலேயே திரு செகசீவனராம் மேற்கண்டவாறு கூறினார்; அவர் மேலும் பேசியதாவது:—

"மாநகராட்சிப் பள்ளிகளை நடத்தும் பொறுப்பில் உள்ளவர்களேகூடத் தங்கள் பிள்ளைகளைப் பணக்காரக் குழந்தைகளுக்கென உள்ள பள்ளிகட்கு அனுப்பிவைக்கின்றனர்.

இந்த நாட்டு மக்கள் அனைவரையும் ஒரே வகுப்பினராக ஆக்க விரும்பினால், கல்வித் துறையில் நிலவிடும் இத்தகைய வேறுபாட்டினை ஒழித்துக்கட்ட வேண்டும்.

அமைச்சர் செகசீவன்ராம் அவர்கள் மேலும் குறிப்பிட்டதாவது:—

"சமுதாயத்தை உருவாக்கக் கல்வி அவசியமாக இருக்கிறது. இந்தக் கல்வியை மக்களுக்குக் கிடைக்கச் செய்யப் பொதுமக்கள் உதவ வேண்டும்.

இப்போது நம் நாட்டில் சில குறிப்பிட்ட சமுதாயங்கள் முன்னேறமுடியாத நிலையில் இருக்கின்றன. பணக்கார வீட்டுக் குழந்தைதளுக்குத் தனிக் கல்வியும், ஏழைக் குழந்தைகளுக்கு ஒருவிதக் கல்வியும் கற்பிக்கப்படுகிறது.

இருவிதமான கல்வி கற்பிக்கப்படுவதால் இரண்டுவிதமான குடிமக்கள் உருவாக்கப்படுவார்கள். இதை நீக்க முதலமைச்சர் அண்ணாதுரையைப் போன்ற முற்போக்காளர் உரிய நடவடித்தை எடுக்கவேண்டும்.

தமிழ்நாடு பல துறைகளில் இந்தியாவுக்கு வழிகாட்டியாக இருக்கிறது; குறிப்பாகக் கல்வியில் தமிழகம் சிறந்து விளங்குகிறது.

பள்ளிக்கூடங்களில் சீருடை வழங்குவதும், மதிய உணவு அளிப்பதும் பாராட்டப்பட வேண்டியவை; இதை மற்ற மாநிலங்கள் பின்பற்றவேண்டும்.

தமிழகத்தைப்போலக் கல்வி நிலையங்கள் மற்ற மாநிலங்களில் இல்வாததற்குக் காரணம், இங்கு இருப்பதைப் போல மக்கள் ஆதரவு அந்த மாநிலங்களில் இல்லை என்பதாகும்.

தமிழகத்துக்குத் தகுதிவாய்ந்த ஒருவர் முதலமைச்சராகக் கிடைத்து இருக்கிறார்; எனவே, அவர், எல்லா மக்களுக்கும் எல்லாத் தேவைகளையும் கிடைக்கச் செய்வார் என்று நம்புகிறேன்."

அண்ணா பதில்

அடுத்து அண்ணா அவர்கள் பேசுகையில், திரு. செகசீவன்ராம் குறிப்பிட்டது குறித்து (கல்வி புகட்டுவதில் வேறுபாடு) ஆராய்வதாகத் தெரிவித்தார்.

படை திரட்டுகிறார் நந்தா!

'லோக் சேனா' என்ற பெயரில் புதிய கோலம்!

புதுடில்லி, சூன் 12—

நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற 'சேனை'கள் போதாவென்று, முன்னாள் இந்திய உள்துறை அமைச்சரான குல்சாரிலால் நந்தா, ஒரு 'சேனை'யைத் துவக்கியிருக்கிறார்!

'லோக் சேனா' என்று இதற்குப் பெயராம்! பதினாறு வயதுக்கும்—நாற்பது வயதுக்கும் இடைப்பட்ட வயதினரை ஏராளமாக இந்தப் படையில் சேர்க்கப் போகிறார்களாம்! நாட்டு நலனை [illegible]னிட்டு தியாக உணர்வோடு இப்படையினர் பணியாற்று[illegible]

[illegible]த் தேசிய அமைப்பு, அநீதிக்கும் ஊழலுக்கும் அதிகார [illegible]யோகத்துக்கும் எதிராகப் போரிடும்" என்று அறிவிக்கப் [illegible]ள்ளது.

இத்தகைய அறிவித்த திரு. நந்தா, நாட்டின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த இளைஞர்கள் தம்மை அணுகி, சமுதாயத்தைப் பீடித்துள்ள தீமைகளை எதிர்த்துப் போராடவும், மக்களின் உரிமைகளை நிலைநாட்டவும் அரசியல்—சமுதாய அடிப்படையில் ஒரு 'சேனை'யை அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டதாகவும், அதன் பேரிலேயே இந்தச் 'சேனை' அமைக்கப்பட்டதாவும் கூறினார்.

இன்னொரு சேனை

ஒரிய மக்களின் நலன்களைக் காக்கும் நோக்குடன் ஒரிசாவைச் சேர்ந்த இளைஞர்கள் கூடி, ஒரு 'சேனை'யை அமைத்திருக்கிறார்கள். இதற்கு 'நெகன்னாத சேனா' என்று பெயரிட்டிருக்கிறார்கள்.

பூரி ஜெகன்னாதரின் பெயரைத் தான் இந்தச் சேனைக்குச் சூட்டியிருக்கிறார்கள்.

நம்நாடு

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எல்

திருவள்ளுவராண்டு 1999 வைகாசி 30 (12—6—68) புதன்

கருத்திருமன் குழப்பமும்மாமருந்தும்

அண்மையில் புதுடில்லியில் நடைபெற்ற அகில்திந்திய காங்கிரசுக் கட்சிக் குழுக் கூட்டத்தில், காங்கிரசு மேலிடத் தலைவர்களுக்கு எதிராகப் பல உறுப்பினர்கள் குரலெழும்பினர். வகுப்புக் கலவரத்திலிருந்து மதுவிலக்கு ஒழிப்பு வரையில்—பல பொருள் குறித்து—அந்த உறுப்பினர்கள், தத்தம் கருத்தைக் காரசாரமாக வெளியிட்டனர்.

இதே கூட்டத்தில், தமிழக சட்டப் பேரவையில் எதிர்க் கட்சியாக இயங்கிவரும் காங்கிரசுக் கட்சியின் தலைவராக கருத்திருமன் அவர்களும் கலந்துகொண்டிருக்கின்றார். கலந்துகொண்டதுடன், தம் திருவாயைத் திறந்து சில கருத்து மணிகளையும் உதிர்த்திருக்கின்றார்.

காங்கிரசுக் கட்சியின் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற மைசூர், மராட்டிரம் போன்ற மாநிலங்களில் மதுவிலக்கு ஒழிக்கப்பட்டு, தாராளமாக மக்களுக்கு மதுவகைகள் கிடைத்திட மதுக்கடைகள் திறக்ப்பட்டிருப்பதை—தமிழ் ஆட்சி நடைபெறும் கொண்டிருக்கின்ற தமிழகத்தில் மதுவிலக்குத் தீவிரமாக்கப்பட்டுவரு வதுடன் ஒப்பவைத்துக் காட்டி—'காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர் கள ஆட்சியில், மதுவிலக்கிருந்த குழி தோண்டலாமா—காந்தி வழி வந்தவர்கள் மதுக் குடிக்கு வழி செய்யலாமா—மதுக் கடைகளைத் திறந்துவிட்டவர்கள், தங்களே இன்னமும் காங்கிரசுக் கட்சியினர் என்றும், காந்திய சீடர்கள் என்றும் பறைசாற்றிக் கொண்டிருக்கலாமா—இப்படிப் பறைசாற்றிக்கொண்டிருப்பதைக் கேட்க வெட்கமாகவும் இருக்கிறது—வேதனையாகவும் இருக்கிறது' என்றெல்லாம் கண்டித்தும் விளக்கியும் கருத்திருமன், அங்குக் காங்கிரசுக் குழுக் கூட்டத்தில் பேசியிருக்கக்கூடும் என்றுதான் எவரும் நினைத்துக்கொள்ளுவர். அப்படி அவர் பேசி இருக்கவேண்டியதுதான் முறையுமாகும்.

மைசூரில் மதுவிலக்கு ஒழிக்கப்பட்ட நேரத்தில் அங்கு முதலமைச்சராக இருந்தவர், இன்றையக் காங்கிரசுத் தலைவராக இருக்கின்ற நிஜலிங்கப்பா அவர்கள்தான். அதே நிஜலிங்கப்பா அவர்கள் தலைமையின்கீழ்தான், இங்குக் காங்கிரசுக் குழுக் கூட்டமும் நடைபெற்றிருக்கிறது. எனவே, மதுவிலக்கு ஒழிக்கப்பட்டதைச் சுட்டிக் காட்டி, 'அவ்வாறு ஒழிக்கப்பட்டது நியாயமல்ல' என்று நிஜலிங்கப்பா அவர்களிடம் நேரில் சொல்லியிருக்கவேண்டும்—தமக்கு உண்மையில் மதுவிலக்கில் நம்பிக்கை இருக்கும்பட்சத்தில் கருத்திருமன் அவர்கள்!

அப்படி அவர் சொல்லியிருக்கும்பட்சத்தில், அதை, 'முறை கேடானது' என எவரும் கூறவும் துணியமாட்டார்கள். அதற்குப் பதிலாகக் கருத்திருமன் அவர்களே—மதுவிலக்கில் அவருக்கு இருக்கக்கூடிய பிடிப்புகளாகவும், உண்மையைத் துணிந்து கூறிய நெஞ்சத் துணிவுக்காகவும்—மற்ற உறுப்பினர்கள் புகழ்ந்தும், பாராட்டியும் இருப்பர்.

ஆனால், கருத்திருமன் அவர்களோ, அங்ஙற்பணியைச் செய்திடவில்லை. சீடர்களால் காந்தியத்துக்குச் சேர்க்கப் படுகின்ற களங்கத்தைத் துடைத்திடும் பணியை அவர் மேற்கொள்ளவில்லை. மதுவிலக்கு ஒழிப்பினை ஏழை எளிய மக்களுக்கு ஏற்படக்கூடிய தீமையைப் பற்றிய சிறிதளவு கவலையும் அவருக்கு இல்லை.

அவருக்கு இருக்கின்ற கவலையெல்லாம் ஒன்றே ஒன்றைப் பற்றியதுதான். கருத்திருமனுடைய சிந்தனை அன்றும், அந்த ஒன்றைச் சுற்றியே வட்டமிட்டுக் கொண்டிருக்கிறது.

அதாவது, 'தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு குலைந்துவிட்டிருக்கிறது; இதை மதியே அரசாங்கம் கூர்ந்து சுவனித்துக் கொண்டு வர வேண்டும்' என்பதைப் பற்றித்தான், கருத்திருமன் கவலை கொண்டிருக்கின்றார். இதைத்தான், கருத்திருமன் மட்டுமல்ல—அவருடைய குருநாதராக தமிழ்நாடு காங்கிரசுக் கட்சித் தலைவரும், மற்றமுள்ள காங்கிரசு மாநிலநாம் நாள் தவறாமல் மேடை தவறாமல் ஒப்பாரிவைத்து வருகின்றனர். பேசுவதற்கு வாய்ப்புக் கிடைக்கின்ற பொழுதெல்லாம் வைத்துவருகின்ற இதே பொருளற்றதும் அடிப்படையற்றதுமான ஒப்பாரியை, கருத்திருமன் அவர்கள், அன்றைத்தினம் காங்கிரசுக் குழுக் கூட்டத்திலும் வைத்திருக்கின்றார்!

கருத்திருமன் உள்ளத்தை அரித்துக் கொண்டிருப்பது மற்றொன்றும் உண்டு. 'தமிழகத்தில் விவசாயிகளுக்குப் போதிய நியாயம் கிடைக்கவில்லே' என்ற குருத்தை, எதிர்க் கட்சித் தலைவராகத் தமமைத் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்தே அவர் கூறிவருகின்றார். அதாவது, 'கெல்லுக்கான அரசாங்கக் கொள்முதல் விலையை மேலும் கூடுதலாக்க வேண்டும்' என்பதுதான்—'விவசாயிகளுக்குப் போதிய நியாயம் கிடைக்கவில்லே' என அவர் குறைபடப்படுக் கொள்ளுவதற்குரிய மூலகாரணமாகும்.

'கொள்முதல் விலையைக் கூடுதலாகக் கொடுக்க வேண்டும்' என்பதற்காகத் தமிழக அரசுக்கு எதிராகப் போராட்டத்தில் குதிக்கப் போவதாகவும், அந்தப் போராட்டத்துக்கு விவசாயிகளைத் தயாரித்துக் கொண்டிருப்பதாகவும்கூட அடிக்கடி கருத்திருமன் அவர்கள்—சில அரசியல் விவகைகளோ சேர்த்துக்கொண்டு—சில நாட்களாகப் பரணி பாடிக்கொண்டு வருகிறார். இதை, தம நெஞ்சில் தமிழ் வைத்துக்கொண்டு, 'வீவசாயிகளுக்குப் போதிய நியாயம் கிடைக்கவில்லே' எனப் பொதுவாகக் காங்கிரசுக் குழுக் கூட்டத்தில் அவர் புலம்பியிருக்கின்றார்.

மற்றெடுத்த கருத்தையும் கருத்திருமன் அவர்கள், அக்குழுக் கூட்டத்தில் கூறியிருக்கின்றார். இங்கருத்தை, அன்றைத்தினம் காங்கிரசுக் குழுக் கூட்டத்தில், ஏதோ, 'கருத்தறிவிப்பது' என்ற நிலையில் மட்டுமே அவர் கூறியிருக்கமுடியாது. நெஞ்சை துடித்துக்கொண்டா தமுதமுக்க—கண்கள் நீர் சொரியுடனா—கருத்திருமன் அவர்கள் அக்கருத்தை—குழுக் கூட்டத்தில் அவர் கூறியிருத்தல் வேண்டும்.

உணவுப் பிரச்சினையில் தமிழக அரசு காட்டும் அக்கறை

மத்திய அமைச்சர் செகசீவன்ராம் பாராட்டு

எண்ணூரில் 10—6—68 அன்று நடைபெற்ற மின் உறையை வைப்பு நிலையத் திறப்பு விழாவில் மத்திய உணவமைச்சர் திரு. செகசீவன் ராம் அவர்கள், உணவு துறையில் தமிழக அரசு காட்டும் அக்கறையையும், அவ்வப்போது தமக்கு ஒத்துழைப்பு அளித்துவருவதையும் பாராட்டியுரைத்தார்; அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

> "தமிழகத்தின் மீன் வளத் தொழில் வளர்ச்சி காரண மாக மீனவர்களுக்குக் கூடு தல் வேலைவாய்ப்புக் கிட்டுவ தற்கு வழிவகுப்பட்டுக்கிறது.
>
> "நீளமான கடற்கரையைக் கொண்டுள்ள தமிழக மீன் வளத்தைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டியது மெத்த அவசியமாகும்"

என்று கூட்டுக் காட்டி விட்டு தொடர்ந்து குறிப்பிட்டதாவது :—

> "தமிழக அரசு, உணவுப் பிரச்சினையைத் தீர்ப்பதில் பெரிதும் அக்கறை காட்டியுது.
>
> கேரளத்தில் அரிசி கேட்டு—அதன் அரசியல் பிரச்சினையாக்கியபோதெலாம் தமிழக அரசு தான் அரிசி தந்து உதவியது; நான் கேரளத்திற்கு அரிசி தரும்படி கேட்டபோதெல்லாம் தமிழக அரசு 5—ஆயிரம் டன்—10 ஆயிரம் டன் என்று அரிசி கொடுத்து உதவியது.

நில முயற்சிகளைத் தமிழக அரசு மேற்கொண்டிருக்கிறது

நமது உணவுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நாம் மீன் உணவை அதிகம் பயன்படுத்தவேண்டும்; நமது நாட்டில் நீண்ட கடற்கரை உள்ளது ஆகவே நாம் மீன்பிடி தொழிலில் அதிக அக்கறை காட்டவேண்டும்.

மத்திய அரசு, இத்துறையில் போதிய கவனம் செலுத்திவருகிறது. தமிழக அரசும் இதில் நல்ல முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது.

கடன் உதவி தரப்படும்

மீன் பிடித் தொழில் வளர்ச்சியுறச் செய்ய நான் னவீன முறைகளைக் கையாள வேண்டும். அதற்காக இனிமேல் விவசாயம் போல் மீன் துறையையும்கடத்த வேண்டும்.

விவசாயத்துக்குக் கடன் கொடுப்பதுபோல் மீன்பிடி சாதனங்களுக்கும் இனிமேல் கடன் தர முடியுமா என்று பரிசீலனை செய்கிறோம்."

அதாவது 'தமிழ்நாட்டில் நிராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிடம் மத்திய அமைச்சர்களை காட்டும் போக்கு, தமிழகச் சட்டப் பேரவைக் காங்கிரசுக் கட்சி, நிறமையான எதிர்க் கட்சியாகச் செய்ப்படுவற்கு இடைஞ்சல் உண்டுபண்ணுகிறது' எனக் குழுக்க் கூறியிருப்பதன் மூலம்—ஒளிவு மறைவு இலலாமல் திட்டவட்டமாகத் தமது உள்ளத்தில் நிரம்பி வழித்தக்கொண்டிருக்கின்ற வயிற்றெரிச்சலே—கருத்திருமன் அவர்கள், அனேத்தினியக் காங்கிரசுக் குழுக் கூட்டத்தில் வெளிப்படுத்திக் கொண்டுள்ளார்.

இதே வயிற்றெரிச்சலே, இதற்கு முன்பேகூட சில முறை, கருத்திருமன் அவர்கள் வெளிப்படுத்திக் கொண்டுள்ளார்.

தமிழக அரசின் கொள்முதல் விலையை நியாயமானது எனக் கூறியதற்காகவும், தமிழக அரசு கொள் முதல செய்வதிலும் விரி யோகிப்பதிலும் பெற்றுள்ள பெரும் வெற்றியைப் பாராட்டியதற்காகவும், கொள்முதல் விலையை வரையறை செய்வதில் தமிழக அரசுக்கு உரிமை இல்லே எனச் சுட்டிக்காட்டி—கொள்முதல் விலையைக் கூடுதலாக்காததற்காகத் தமிழக அரசைக் கண்டித்த காமராசர் அவர்களுக்குச் சூடாகப் பதிலளித்ததமைக்காகவும், தாம் ஒரு விவசாயிதான எனக் கூறுவதன் மூலம் தம்மை விவசாயி எனப் பீத்திக் கொண்டிருந்த கருத்திருமன் அவர்கிள வாயடைக்கச் செய்ததற்காகவும், மத்திய உணவு அமைச்சர் செகசீவன் ராம் அவர்கள் மீது, ஏற்கனவே இதே கருத்திருமன் அவர்கள் சீறிப் பாய்ந்துள்ளார். 'செகசீவன் ராம் அவர்கின் மத்திய அமைச்சரவையிலிருந்து வெளியேற்ற வேண்டும்' என்றுகூட அவர், ஆத்திரம் கொண்டு அப்பொழுது அலறியிருக்கின்றார்!

எதிர்க் கட்சி என்றல், சமுக ஆட்சி செய்கின்ற நலன் தரும் பணிகளேயும் எதிர்த்துக்கொண்டிருப்பது—குறைகூறிக் கொண்டிருப்பது எனக் கருத்திருமன் அவர்கள் பொருள் கொண்டுவிடுப்பட தனுல்தான், தமிழக அரசைக் குறிப்பிட்ட பணிகளுக்காக மத்திய அமைச்சர்கள் பாராட்டுவதைத் தாங்கிக்கொள்ள முடியாமலும், எதிர்க் கட்சித் தலேவருக்குரிய பணியைத் திறமையாகச் செய்துவர விடாமல் தமக்கு இடர் விளவித்துக்கொண்டிருப்பதாகவும் கருத்திருமன் கவலேப்பட்டுக் கொண்டிருக்கின்றார்.

தாம் எந்த அளவுக்குக் காங்கிரசுக்காரரோ—அந்த அளவிற்குக் கூடுதலாக இல்லே என்றலும்—அதே அளவு காங்கிரசுக்காரர் களாகதானும் மத்திய அமைச்சர்களும் இருக்கின்றார்கள் என்ற உண்மையை, முதலில் கருத்திருமன் அவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். இந்த உண்மையை உணர்ந்துகொண்டால்தான், 'எதிர்க் கட்சி தமிழகத்தில் எப்படிப் பணிபுரிந்து வரவேண்டும்' என்ற முறையை, கருத்திருமன் அவர்களால் உணர்ந்துகொள்ள முடியும்.

சமுக ஆட்சிக்கு எதிராக, எதிர்க் கட்சியான காங்கிரசுக் கட்சியைத் திறமையாகச் செயல்படவிடக்கூடாது என்ற கெடு நினேப்பிலும்—எதிர்க் கட்சித் தலேவரான கருத்திருமன் அவர்களே எதிர்க் கட்சித் தலேவராக இருக்கும் தகுதி இல்லே எனக் காட்டிவிட வேண்டும் என்ற தீய நினேப்பிலும்—ஏதோ திட்டமிட்டு மத்திய அமைச்சர்கள் சமுக ஆட்சியைப் பாராட்டிக் கொண்டிருப்பதாகக் கருத்திருமன் அவர்கள் கற்பனே செய்துகொண்டு, மத்திய அமைச்சர்களின் பாராட்டு தாம் திறமையாகச் செயல்படுவதற்குக் குறுக்காக நிற்கிறது எனக் கூறிக்கொண்டிருப்பது நகைப்புக்குரியது தானும்.

சமுக ஆட்சியில் காணக்கூடிய நன்மைகளே மனம்விட்டுப் பாராட்டுவதும், காணக்கூடிய தவறுகளேத் தீவிரமாகக் கண்டிப்பதும், எதிர்க் கட்சியாகிய இயல்பு என்ற மக்களாட்சி முறை மாண்பை, கருத்திருமன் அவர்கள் அறியார் என நாம் நம்ப மாட்டோம்.

சமுக ஆட்சியை—எதிர்க் கட்சி என்பதற்காக—எதற்காகவும் கெடுத்தாலும் எப்போதும் கண்டித்துக்கொண்டிருக்கின்றதாலு தவறான போக்கின் விளைவாகதான், 'சமுக ஆட்சியை மதமிய அமைச்சர்கள் பாராட்டும் போக்கு, நான் திறமையாகச் செயல் படி வதற்கு முட்டுக்கட்டையாக அமைந்துவிடுகிறது' எனக் க திருமன் அவர்கள், கண்கலீல் கசகசவேண்டிய இழிநி ஆளாகி இருக்கின்றார். 'சமுக ஆட்சியும் நன்மை செ என்ற கருத்துக்கு, தமது உள்ளத்தில் சிறிதளவு இடம் திடப் படுக்கொண்டாலும் போதும—பொறுப்பற்ற மு கற்பனேக் குற்றச்சாட்டுகளேக் கூறி சமுக ஆட்சியை எதற்கெ தாலும் கண்டித்துக் கொண்டிருக்கின்ற தமது போக்கைக் கருத் திருமன் அவர்களால் மாற்றிக்கொள்ள முடியும். சமுக ஆட்சியைக் குறித்து மேற்தற்பிப்பிட்டிருக்கின்ற நற்கருத்துக்குத் தமது உள்ளத் தில் எப்பொழுது இடம கொடுத்திடுகின்றரோ—அப்பொழுது முதற் கொண்டே—சிறந்த எதிர்க் கட்சித் தலேவராகக் கருத்திருமன் அவர்கள் விளங்குவார் என்பதுடன், தமது திறமை மத்திய அமைச்சர்களின் பாராட்டும் போக்கால் குன்றுது—குறைந்து விடாது என்ற தன்னம்பிக்கையையும் அவர் பெற்றுவிடுவார் என் பது உண்மையிலும் உண்மையாகும்.

—கா. கை.

தனிப் பொலிவுடன் இராஜாஜி மண்டபம்

மத்திய அமைச்சர்கள்—மாநில முதலமைச்சர்கள் கலந்து கொண்ட சிறப்புமிக்க காட்சி

சென்னை, ஞாயிறு 12—

சரித்திரப் புகழ்பெற்ற இராஜாஜி மண்டபம் அண்மையில் புதுப்பிக்கப்பட்ட பிறகு முதன் முதலில் அங்கு நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாடு, தனிப் பொலிவுடன் தோற்றமளித்தது!

புதிய வண்ணம் தீட்டப்பட்ட சுழ்நிலேயில்—பெரும் வெளிச்சமுடன் சர வினக்குகள் மின்ன—அப்பண்டபத்தில் மாலே முதலமைச்சர்களும், அதிகாரிகளும் அமர்ந்திருந்தனர்.

தமிழக முதலமைச்சர் அண்ணு அவர்களும், மற்றும் அமைச்சர்கள் இரா. நெடுஞ்செழியன், கே.ஏ. மதியழகன், ஏ. கோவிந்த சாமி, மா. முத்துசாமி, செ. மாதவன், சாதிக் பாட்சா ஆகியோருடன்—மத்திய உனவு அமைச்சர் செகசீவனாரும், சுமுதாய வளர்ச்சித் திட்ட அமைச்சர் குருபாதசாமி, திட்டக் குழு உறுப்பினர் வெங்கடப்பா ஆகியோரும், ஆந்திரம்—கேரளம்—கருநாடகம்—மாராட்டிரம்—ஒரிசா—பஞ்சாப்—இராஜஸ்தான்—கோவா—பாண்டிச்சேரி மாநிலங்களின் முதலமைச்சர்களும், மற்ற மாநிலங்களிலிருந்து வந்திருந்த சமுக வளர்ச்சித் திட்ட அமைச்சர்களும் மண்டபத்தில் அமர்ந்திருந்தனர்.

வண்ண புகழ் நானூறு

[illegible]க்கு வேண்டுகோள்

[illegible] நானூறு' வேலை [illegible]டையேற்று வரு [illegible]துவரையில் கவிதை [illegible]த கவிஞர்கள், அவர்கள் பாவில் அண்ணுவின் புகழ் பாடி இதிற்கள் இறுதிக்குள் அனுப்பி வைக்கமாறு புதுவை அண்ணு புகழ் நானூறு குழுவினர் கேட்டுக் கொள்கின்றனர்.

அனுப்பவேண்டிய முகவரி :—

புலவர் அ்மைதி—தென் னன்கொற்றப்பா சிரியர்,

அண்ணு புகழ் நானூறு,

95, மேரு வீதி, புதுச்சேரி-1.

தமிழில் விஞ்ஞானக் கல்வி பயில்வோருக்குச் சலுகை

தொழிற்கல்லூரிகளில் சேருவதற்குத் தடையிருக்காது

கல்லூரிகளில் 3,000 இடங்கள் அதிகரிக்கும் --

செய்தியாளரிடை கல்வியமைச்சர் நெடுஞ்செழியன் விளக்கம்

திருச்சி, ஜூன் 12—

அரசினர் கல்லூரிகளில் புகுமுக வகுப்பில் விஞ்ஞானப் பாடங்களோடு தமிழில் சற்றக முற்படும் மாணவர்கள் தங்களது புகுமுகப் படிப்பு முடிந்தபின் மருத்துவம், பொறியியல் போன்ற தொழிற் கல்லூரிகளில் சேருவது சம்பந்தப்பட்ட வரையில், புகுமுக வகுப்பில் ஆங்கிலத்தில் விஞ்ஞானப் பாடங்களைப் படித்து முடித்தவர்களுக்குச் சமமாகக் கருதப்படுவர் என்ற திட்டவட்டமான உறுதி மொழியைக் கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் அளித்தார்.

செய்தியாளர்களிடையே அவர் பேசுகையில், 'புகுமுக வகுப்பில் விஞ்ஞானப் பாடங்களோடு தமிழில் படிக்கும் மாணவர்களை இது சம்பந்தமாக அச்சம் எதவும் கொள்ளத் தேவை இல்லை' என்பதைத் தெளிவாகவே ; 'தொழிற் படிப்புச் சம்பந்தமாக அவர்களிடம் பாரபட்சம் எதுவும் காட்டப்படமாட்டாது' என்றார்.

"மாநகரங்களில் புகுமுக வகுப்புக் காகச் சில ஆண்டுகள் கலலூரி களில் 'ஷிப்டு' முறை செயல் படுத்தப்படுமா ?" என்று கேட் கப்பட்டதற்கு, 'அடுத்த வரும் கல்வி ஆண்டிலிருந்து சுமார் 10 கல்லூரிகளில் திறக்கப் படுவதால், புகுமுக வகுப்பில் சேர வருவோரின் நெரிசல் சமாளித்துவிட முடியும் என்று திடமாக நம்புவதாக அமைச்சர் பதிலளித்தார்; 'புதிய கல்லூரி கள் மூலம் கூடுதலாக சுமார் 3 ஆயிரம் பேரைச் சேர்த்துக் கொள்ள முடியும்' என்றார்.

சில நகரங்களிலுள்ள கல்லூரி களில் மட மடமே நெரிசல் அதிக மாக இருக்கும் என்று தாம் கருதுவதாகவும், அவசியம் ஏற் பட்டால் பல்கலைக் கழகத்தை கலந்தாலோசித்தச் சில கல் லூரிகளில் 'ஷிப்ட்' முறைக்கு அரசு ஏற்பாடு செய்யும் என் றும் குறிப்பிட்டார்.

ஹையர் கிரேடு

படிப்பியாக ஹையர் கிரேடு ஆசிரியர் பயிற்சியை நீக்கிவிட அரசு முடிவு செய்திருப்தாக அமைச்சர் தெரிவித்தார்.

தரத்தை மேம்படு துவதிலேயே அரசு இனி முக்கியமாகக் கவனம் செலுத்தும் எனறும், மூன்று பீரம் ரைபர் கிரேடு ஆசிரியர் பதவிகள் இந்த ஆண்டு கெசன் டரி கிரேடு பதவிகளாக மாற்றப்படும் எனறும் சொன்னர்.

மறு உத்தரவு வரையில், ஹையர் கிரேடு பயிற்சிக்கு விண்ணப் பங்களே வழங்க வேண்டாமென ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளை அரசு கேட்டுக் கொண்டிருப்பு தாகத் தெரிகிறது.

உயர் தகுதிகோப் பெறும் பொருட்டு ஆசிரியர்களை ஊக்கு விக்கத் திட்டமொன்றை அரசு அங்கீகரித்துள்ளது. உயர் தகுதி பெறும் ஆசிரியர்களுக்கு முன் கூட்டி இரு சம்பள உயர்வு வழங்குவதற்குத் திட்டம் வகை செய்கிறது. திட்ட விவரங்கள் தயாரிக்கப்படுகின்றன.

"முன்னுள் மாவட்டக் கழக உயர்நிலப் பள்ளிகளின் நிர்வாகச் சீரழிப்புகளும் நிர்ந்தர நிர்வாக அமைப்பை ஏற்படுத்தவும் கூடிய விரைவில் உத்தரவு பிறப்பிக்கப்படும்" என அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

குழந்தைவினுயர்கோட்டையில் அஞ்சல் நிலையத் திறப்பு

திருவாரூருமன் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த சூழகதையினு மகர்கோட்டை கிராமத்தில் 29—5—68 அன்று அஞ்சல் நிலையத் திறப்பு விழா 'நடைபெற்றது. ஆலங்குடி தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் கே. வி. சுப்பையா பி.ஏ. தலைமைதாங்கினர்; தேசிய கொடியை திருவாரூர்மன் ஊராட்சி ஒன்றிய ஆணையர் பெ. வேலாயுதம் ஏற்றிவைத்தார்.

கிராம மக்கள் ரூ 3,000 மதிப் புள்ள கட்டிடத்தைக் கட்டி முடித்து அஞ்சல் நிலையம் நடத்த னன்கொடையாக வழங்கினர்.

அஞ்சல் நிலையக் கட்டிடத்தை புதுக்கோட்டை அஞ்சல் நிலைய மேற்பார்வையாளர் டி. எம். முகமது யூசுப் திறந்துவைத்தார்.

புதிய கட்டிடம் திறந்து வைக்கப்பட்டதும், 50 பேர்கள், சிறு சேமிப்புத் திட்டத்தில் சேர்க்கப் பட்டனர்.

வரலெலி மன்றத் துவக்கம்

29—5—68 அன்று குளமை ஊராட்சி ஒ சார்ந்த குழந் கோட்டை கிராம பெற்ற கிராம வா துவக்க விழாவிற்கு திரு வேலையா எம்.எல்.ஏ. தலைமை தாங்கினர்.

ஊராட்சி ஒன்றிய ஆணையர் பெ. வேலாயுதம், வரலெலி மன்றத் தைத் துவக்கி வைத்தார்.

வரலெலி மன்றத்தில் 20-பேர் கள் உறு பினர்களாகச் சேர்ந் தனர். வரலெலி மன்றத் தலைவ ராக செல்வி, செயலாளராக சுல தான் முகமது ஆகியோர் தேர்ந் தெடுக்கப்பட்டனர்.

திருவெறும்பூர் சதி வழக்கில் தீர்ப்பு

15 பேருக்கு சிறைத் தண்டனை

திருச்சி, ஜூன் 11—

திருவெறும்பூர் கோ தி ல வன் தொழிற்சாலை சதி வழக்கில் விசேட நீதிபதி எம். சாமதாஸ் இன்று தீர்ப்புக் கூறினர்.

மொத்தம் 29 எதிரிகளில் 15 எதிரிகளுக்கு ஓராண்டிலிருந்து ஏழாண்டுகளவரை கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

தண்டனைபெற்றவர்களில் ஒரு கிர வாக எஞ்சினியர், நான்கு உதவி எஞ்சினியர்கள், ஒரு இன்ன எஞ்சினியர், ஒரு சூப்பர்வைசர் ஆகியோரும் இருக்கின்றனர்!

இவர்கள் அனைவரும் தமிழக அரசின் பொதுப் பணித் துறை யைச் சேர்ந்தவர்கள் ; மீத முள்ள எட்டு எதிரிகள் கான்டி ராக்டர்கள்—அவர் களுடை யஉறவினர்கள்.

இப்போது 'ஸ்பெண்டிங்'கிற்கும் சூப்பிரண்டெ ண்டு எஞ்சினியர் பி. கே. வேதாயகம் உட்பட 14 எதிரிகள் விடுதலே செய்யப் பட்டனர்.

தண்டனையடைந்த வர்களில் மூன்றுபேருக்குஏழாண்டும்; ஒருவருக்குஐந்தாண்டும்; மூன்று பேருக்கு மூன்றாண்டும்; மூன்று பேருக்கு இரண்டாண்டும்; ஐந்து பேருக்கு ஓராண்டும் சிறைத் தண்டனை விடைத்தது.

1962-ம் ஆண்டு பிற்பகுதியில், சனரகக் கொதிசலன் தொழிற் சாலைக்கான நிலம், தமிழ்ப் பொதுப் பணி இலாகாவின் தனிப் பிரிவினுல் சர் படுத்துப் பட்டபோது எதிரிகளான அதி காரிகளு,கான்டிராக்டர்களும் சதி செய்ததாகக் குற்றஞ்சாட் டப்பட்டது.

இந்தச் சதியைத் தொடர்ந்து அவர்கள், கூடுதல் கொதகக் கான பட்டியல்களேயும், பேலிப் பட்டியல்களேயும் தயாரித்து, அரசுக் கணக்கிலிருந்து பணம் வாங்கிக்கொண்டதாகக் கூறப் பட்டது.

சுான்டிராக்டர்களும், அதிகாரி களும் சுமார் ரூ. 5.65-இலட்சங் கள்வரை மோசடி செய்ததாகக் கூறப்பட்டது.

தீர்ப்புக் கூறப்பட் டிவன், இரண் டாண்டுக் கடுங்காவல் தண் டனை விதிக்கப்பட்ட உதவி எஞ் சினியர் எம். ஏ. நாராயணன் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட 'ரமான' மனுக்கள், நீதிபதி நிராகரித்தார்.

தமிழக மின் குழு

டெண்டர் அறிக்கை

தமிழக மின்சார வாரியத்தின் சார்பாகக் கேட்காரும் பொருள்கள் வாங்குவதற் காள முடி முத்தினாவிட்ட விலேயொப்பங்கள் (டெண்டர்கள்) அடியில் குறிப்பிடப்பட்டுள்ள வரால் அவரது அறுவகத்தில் 29—6—68 பிற்பகல் 1 மணிவரை பெற்றுக்கொள்ளப் படும்.

வரிசை எண்	சாற்றுக் குறிப்பு எண்	பொருள்	அளவு
1.	T2/TWME1/68—69	50 செ. மீ × 35 செ. மீ. × 16 மி மீ அளவு தேக்கு மர மீட்டர் போர்டுகள்	7,000
2.	T2/TWME2/68—69	45 செ. மீ. × 30 செ. மீ. × 16 மி.மீ. அளவு தேக்கு மர மீட்டர் போர்டுகள்	10,000

மேற்படி பொருள்களேப் பற்றிய விவரங்களும் விலேப் புள்ளிகளுக் குறித்து அறுப் புதற்குரிய தாள் ஒன்றும் அடங்கிய ஒப்புச்சாற்றுக் குறிப்பும் பிரதிகள் (ஸ்பெசிபி கேஷன் காபிஸ்) வேளாங்கோ பிறகு ஒன்றுக்கு ரூ. 5.15 (மிற்பனவரி உள்பட) இவ் வலுவலகத்தில் கொற்கோரோ, அல்லது 'தலேமைக் கணக்கர், தென் ஆற்காடு மின் அமைப்பு, விழுப்புரம்' என்ற முகவரிக்கு மணியார்டர் அல்லது புரைஃடு டிராப்டு மூல மாகவோ அல்லது தேர்லோ தெலுத்தி அவற்றை 14—6—68 தேதிபிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

மேற்படி தேதிக்கு எக்காரணத்தை முன்னிட்டும் நிருப்பித் தரப்படமாட்டாது. இத் தொகையை மணியார்டர் மூலமாக அனுப்பியோர் நலது முகவரியையும், தேவையான பிறுக்குரிய சாற்றுக் குறிப்பு எண்ணையும் (ஸ்பெசிபிகேஷன் நெம்பர்) தெளிவாகக் குறிப்பிட வேண்டும். பிறிதன் சாதாரண அஞ்சல் மூலமாகவே அனுப்பப்படும். அனவ உரியவர்க்குச் சேர்க்கப்படாவிட்டால் அதற்கு இவ்வாரியம் பொறுப்பல்ல.

இவ் நாள்களில் அனுப்பப்படாத விலேயொப்பங்களும், குறித்த காலம் தவறி வருபவையும் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. ஒருவர் பெயரில் வங்கப்பட்ட விலேயொப்பங்களும், சாற்றுக் குறிப்புகளும் மற்றெருவர் பயன்படுத்துவது செல்லாது. வேலைத் தொகை (Earnest Money Deposit) இல்லாமல் அனுப்பப்படும் விலே யொப்பங்களும் குறித்த தேதிலில் வந்து சேராத விலேயொப்பங்களும் கண்டிப்பாக ரத்தப்படமாட்டா.

விலேயொப்பங்கள் 29—6—68 அன்று பிற்பகல் 3 மணிக்கு இவலுவலகத்தில் வந்துள்ள விலேயாப்தாரர்கள் (டென்டர்கள்) முன்னிலேயில் மேற்கண்டவரால் பிரிக் கப்படும்.

மேற்பார்வை பொறியாளர்,
தென்னகாடு மின் அமைப்பு, விழுப்புரம்

பூ. ஆர். ஜீவரத்தினம் இசை நிகழ்ச்சி

பெங்களூர் வன்னுவர் மன்றக் ட்டிட நிகிகளாக, 16—6—68 பகல் 12 மணிக்கு ராயை மித்ர மண்டலி அரங்கில், சருகாடக மாலில் திமுக. அமைப்பாளர் நிரவலிடமணி தலேமையில் இசைக் குயில் பூ. ஆர். ஜீவரத்தினம் குழு வினரின் இசை நிகழ்ச்சி நடை பெறும

டது. போலீசுப் பாதுகாப்பு டன் திருச்சியிலுள்ள அரசுத் தலேமை மருத்துவமனைக்கு அவர் தூக்கிச் செல்லப்பட்டார்.

தண்டிக்கப்பட்ட 14 எதிரிகளின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட 'ஏபாடின்' மனுக்கள், நீதிபதி நிராகரித்தார்.

கைதிகளுக்கு நல்ல உணவு வழங்கப்படுகிறதா?

குடும்பக் கலெக் கல்லூரி மாணவியர் சோதன நடத்துவர்

திருச்சி, ஜூன் 11—

சிறைக் கைதிகட்கு அளிக்கப் படும் உணவு நல்ல முறையில் உள்ளதா — சத்து மிகுந்ததாக இருக்கிறதா என்பனவற்றையெல் லாம் சோதித்துப் பார்க்கும்படி, கோவையில் உள்ள அவுஞிலிங் கம் குடும்பக் கலேக் கலலூரி மாணவியர்களைத் தமிழக அரசு கேட்டுக்கொண்டிருப்பதாக சட்ட அமைச்சர் திரு. மாதவன் இவ்கு தெரிவித்தார்.

இந்தி ஆசிரியர்கட்கு மாற்றுவேலே

புகாருக்குக் கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் பதில்

மதுரை, ஜூன் 12—

தமிழகத்தில் 2,500 இந்தி ஆசி ரியர்கள் வேலேயில்லாமல் பாதிக் கப்பட்டிருப்பதாக முதலமைச்சரி டம் கொடுக்கப்பட்டுள்ள மனுவில் குறிப்பிடப்பட்டிருப்பது பற்றிச் செய்தியாளர்கள் கேட்டதற்கு கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ் செழியன் அழர்கள் பதிலளிக்கை யில் கூறியதாவது :—

"2,500 இந்தி ஆசிரியர்கள் வேலேயில்லாமல் பாதிக்கப்பட் டிருப்பதாகக் கூறுவது சரியல்ல; 600 பேருக்குத்தான் வேலே கிடைக்கவில்லே; அந்த 600 பேர்களும் பயிற்சி பெறுவர் கள் ; அவர்களும் உரிய தகுதி யிருந்தால் மாற்றுவேலே தரப் படும்"

டி. கே. சீனிவாசன் புதிய முகவரி :

டி. கே. சீனிவாசன்,
33-A/3, ஆலிங்காத்த பிள்ளே தெரு,
திருவல்லிக்கேணி, [நெருங் தென்னை-5.

தாழ்த்தப்பட்டமக்களுக்குக் காங்கிரசுப் புரிந்த தொண்டு என்ன?

இன்னமும் அவர்களுக்கு விடுதலே கிடைக்காத அவலநிலே ஏன்?

அமைச்சர் செகசிவன்ராமின் மனக் குமுறல்

சென்னை, ஜூன் 12—

"தாழ்த்தப்பட்ட சமுதாயம் இன்று சிக்கலான குழ்நிலேயில் இருக்கிறது; நீண்ட நெடுங் காலமாக இந்தச் சமுதாயம் பல தொல்லேகளுக்கு ஈர்ங்கி வந்திருக்கிறது—பல தடைகளேத் தாண்டி வந்திருக்கிறது; என்ற லும், இன்றைய நிலே மை என்ன ?

இடத்தில் ஒரு தாழ்த்தப் குடிமகன் சட்டுக்கொள ாள்; இன்னெரு இடத் ாழ்த்தப்பட்ட மக்கள் பட்டார்கள்; பிறிதோர் தில் தாழ்த்தப்பட்ட மக் கள் குடைக்குத் தீ வைக்கப் பட்டது; ஓர் இடத்தில் ஒரு தாழ்த்தப்பட்ட சிறுவன் உயி ரோடு கொளுத்தப்பட்டான! இவை புதியவை அல்ல! பல நூற்றண்டுகளாக இருந்த சமு தாயம் இத்தகைய தொல்லே களேப் பொறுத்துக்கொண்டு தான் வந்திருக்கிறது! ஆனல் இன்று அட்டூழியம் விழிப்பு—எதிர்த்துப் போராடும் விழிப்பு—உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது!

"ஆயிரமாயிரம் கொகைள்—ஆயிரமாயிரம் தீ வைப்புகள்—ஆயிரமாயிரம் போர் தாக்குதல்கள்! இவைகள் நடந்தே தீரும் ஏனெனில், நம்முடைய விடுதலேக்கு இவைகள் நாம் தரும் காணிக்கைகள்!

"யாரும் தாழ்த்தப்பட்ட மக்களே மீட்க முன்வரவில்லே; நீங்களே தான் போராடி, விடுதலே பெற் றுக்கொள்ள வேண்டும்.

"அண்மையில் அரியானு மாகி லத்துக்குச் சென்றிருந்தேன்; அங்கு ஒரு குக்கிராமத்தைத் சேர்ந்த தாழ்த்தப்பட்ட மக்கள் என்னிடம் ஒரு 500 கொடுத்தார் கள்; உயிரோடு கொளுத்தப் பட்ட சிறுவனின் குடும்பத்துக்கு அந்த நிதியைத் தருமபடி கேட்டுக் கொண்டார்.

"எப்போதெல்லாம் உரிமைக் காகப் போராடுகிறோமோ அப் போதெல்லாம், இத்தகைய கொடுமைகளே அனுபவிக்கத் தான் வேண்டும். நமக்குச் சிறு சிறு உதவிகள் செய்வார் கள்—ஆனுல், உரிமை கேட்க கொடுக்கமாட்டார்கள்!

"பிச்சை கேட்பதுபோல உரிமை யைக் கேட்கக் கூடாது! மனு கொடுத்தல் உரிமை கிடைக் காது! நம்முடைய உரிமையை நாமே எடுத்துக்கொள்ள வேண் டும்! அதற்காகத் தியாகம் செய்யவேண்டும்! அத்தத் தியா கப் போராட்டத்துக்கு நாம் தயாராக வேண்டும்!

"முழுக் கோட்டா கொடுக்கப் பட்டாலும் படித்த தாழ்த்தப் பட்ட இன்னர்கள் அனேருக் கும் அரசு வேலே கிடைக்க முடி யாது; தனியார் துறையில் அவர்களுக்கு அனேமாக இடம் இல்லே; ஆகவே, மற்றவர் களுக்கு அடிமையாக இருப் பதைவிட தாழ்த்தப்பட்ட இன் னர்கள், சிறு தொழில்களே ஆரம்பிக்க வேண்டும்.

"ஒட்டுக்காக மட்டும் தாழ்த்தப் பட்ட மக்களே பயன்படுத்திக் கொள்கிறார்கள்! காங்கிரசுக் கட்சிக்குள்ளேயேகூட அவர் களுக்கு உரிய இடத்தைக் கொடுப்பதில்லே! எனவே காங் கிரசுக் கட்சியின் கொள்கை குறுகிக் குறுகிக் கொண்டே வந்திருக்கிறது! இதுவல்ல இடங் களிலும் உள்ள உண்மை!"

--அமைச்சர் செகசிவன்ராம்

(சுந்தியஜோந்தில் பலலில் நடந்த தாழ்த்தப்பட்டோர் லீக் மாநில கூட்டத்தில்)

நில வளத்தினைவிட நீர்வளம்பயன் தரத்தக்கது!

முப்புறமும்கடல்சூழ்ந்த தமிழகத்தில் மீன்பிடித் தொழில் வளராதது ஏன்?

'மத்திய அரசின் உதவி கிட்டினால் மிகுந்த பயனைப் பெற முடியும்'

மத்திய அமைச்சர் செகசீவன் ராம் முன்னிலையில் அறிஞர் அண்ணா விளக்கம்

சென்னை, ஜூன் 11—

"மீன் பிடித் தொழிலை விஞ்ஞான முறைப்படி நடத்திப் பல நாடுகள் நல்ல இலாபமும், வாழ்க்கை வசதிகளும் பெற்றுவருகின்றன; நம் நாட்டிலும் தொன்றுதொட்டு இந்தத் தொழில் இருந்துவந்த போதிலும், போதிய வருவாய் இல்லாமல், மீனவர்கள், தாழ்த்தப்பட்ட — ஒதுக்கப்பட்ட நிலையில், சலிப்புடன் இத்தொழிலைச் செய்துவருகின்றனர். வருமானமும் ஆதாயமும் கிடைக்கத்தக்கவகையில் இத்தொழிலை வளர்க்கும் முயற்சியில் தமிழக அரசு முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறது; இங்கியப் பேரரசும் தகுந்த முயற்சிகளை எடுத்து வருவது பாராட்டத்தக்கது"

என்று முதலமைச்சர் அண்ணு அவர்கள், இன்று இராயபுரத்தில், மத்திய மீன்பிடித் தொழிற் பயிற்சி நிலையத் திறப்பு விழாவுக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்கள்.

இராயபுரம் சுரிய நாராயண செட்டித் தெருவில் இந்தப் பயிற்சி நிலையத்தை மத்திய அமைச்சர் திரு. ஜெகசீவன்ராம் திறந்துவைத்தார்.

அமைச்சர் கோவிந்தசாமி

வேளாண்மையமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி அவர்கள், மீன் பிடித் தொழில் வளர்ச்சித் திட்டத்தை விளக்கும் புத்தகத்தை வெளியிட்டு உரை நிகழ்த்துகையில், தமிழகத்தில் மூன்றும் திட்டத்தில் மீனபிடித் தொழில் கணிசமான அளவுக்கு வளர்ச்சியடைந்திருப்பதாகவும், இத்தகைய பயிற்சி நிலையங்கள் தமிழகத்தில் மேலும் சில இடங்களில் துவக்கப்படுமென்றும், இதுவரை 1,091 மீனவர்களுக்குப் பயிற்சியளிக்கப் பட்டிருப்பதாகவும், இப்போது 260 பேர் பயிற்சிபெற்றுவருவதாகவும், இந்த நிலையத்தில் 10-மாதக் காலத் திற்கு 60-பேருக்குப் பயிற்சியளிக்க கப்படும் என்றும், அவர்களுக்குப் பயிற்சிக் காலத்தில் உதவிப் பண மும் வழங்கப்படும் என்றும், மீன பிடித் தொழிலை இயன்றிர மமாக்க வும், கனி சாதனங்களைப் பயன் படுத்தவும் இந்தப் பயிற்சி பயன் படும் என்றும் கூறி விளக்கினர்.

அண்ணு

அண்ணு அவர்கள் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

மீனவர்கள் பாதுகாப்பான வசதி நிறைய அளவிலும் மீன்களைப் பிடிக்க விஞ்ஞான முறையிலும் பல வழிமுறைகளையும் கையாள வேண்டு ; அதற்கு இந்தப் பயிற்சி நிலையம் மிகவும் பயன்படும்.

இயங்கிரப் படகுகளைச் செலுத்தவும், மீன்களை எங்கே கிடைக்கும் என்பதைக் கண்டறியவும் இங்கு பயிற்சியளிக்கப்படும். இப்பயிற்சி நிலையம் முழு வடிவம் பெறும் போது ரு 60-இலட்சம்வரை செல வானதாக அமையும்.

இதில் பயிற்சி பறும் வாலிபர் கள் நல்ல முறையில இதில் ஈடு பட்டு, பெரிய தொழிலாக இதை வளர்க்கவேண்டும். முப்புறமும் கடல் சூழ்ந்துள்ள தமிழ்நாட்டில் இத்தொழில நல்ல வளமையு எனபதிலே யாருக்கும் ஐய பாடில்லே.

நமது நாட்டின் அருமில் உள்ள மீன்களே, நெடிய தொலேவிருக் கும் ஜப்பானியரும் மற்றவர்களும் வந்து பிடித்துச் செல்கின்றனர்.

நாம், கட்டமரத்தைக் கொண்டு மீன் பிடித்த நிலையிலிருந்து சாதா ரண படகுமும் மீனபிடிக்கு நிலேக்குத்தான் வளர்ந்திருக்கிறோம் இயந்திரப் படகுமும் இன்னும் ஆழமான பகுதிகளுக்குச் சென்று மீன பிடிக்கவேண்டுமானால், அதற் ான கப்பல்களும், தழமுகங் களும் அமைந்தாக வேண்டும்.

நிலவளத்தைப் பெருக்குவதை விட நீரிலிருக்கு கிடைக்கும் வளத்தைப் பெற நாம் சிறிது கஷ்டப்பட்டாக வேண்டும். நிலத்தில் விதைத்தால்தான் அறுவடை செய்ய முடியும் நீரில் விதைக்காமலே மீன் கிறது. அந்தப் பலனை அடைய நாம் நல்ல முயற்சி களே மேற்கொள்ளவேண்டும். நமக்கு இயந்திரப் படகுகளும், இன்னும் சில கனிச வருவி களும் கிடைக்க அங்கியச் சேவாவனி வழங்குவதில் மத்திய அரசு தயகம் காட்டிய தாலேயே மீன் வளத் திட்டங் களும் போதிய அளவு செயல் பட முடியவில்லே.

இப்போது மத்திய அமைச்சர் செகசீவன்ராம் அவர்கள் அதற் கான முயற்சியை மேற்கொண்டி ருப்பது நமக்கு மகிழ்ச்சியை அளிக் கிறது.

கிடைக்கும் அங்கியச் சேவா வனியில் தமிழகத்திற்கு எத்த அளவுக்குப் பலன் கிடைக்கும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

இந்தப் பயிற்சி நிலேயத்திற்குத் தமிழக அரசு இரண்டு ஏக்கர் நிலம ஒதுக்கி அளித்துள்ளது. பயனுள்ள எந்தக் காரியத்துக் கும் தமிழக அரசு தடையாக இருக்காது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள் கிறேன்.

அமைச்சர் செகசீவன்ராம் அவர்கள் மேற்றம், இன்றும் பல வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டதடன் நாகேயும் பல நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதை அவருக்கு இருந்துவரும் நலல அக் சறையைக் காட்டுகிறது.

அமைச்சர் முத்துசாமி பம்பாய் பயணம்

உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மா. முத்துசாமி அவர்கள், 13-6-68 பிற்பகல் 2-30 மணிக்கு விமானம் மூலம் புறப்பட்டு மா லே 4-20 மணிக்கு பம்பாய் சென்றடை வார். அங்கு ஆளுநர் மாளிகை யில் தங்குவார்.

14—6—68 அன்று பம்பாயில் நடைபெறும் அனைத்திந்திய கதர்-கிராமத் தொழில் சமூகச் சிறப்புக் கூட்டத்தில் கலந்துகொள் வார்.

மாநாள் பம்பாயில் தங்கி யிருந்துவிட்டு, 16—6—68 காலே 6-30 மணிக்கு பம்பாயிலிருந்த விமானம் மூலம் புறப்பட்டு காலே 8-10 மணிசு சென்னே வந்தடை வார்.

காங்கிரசு ஏட்டின் மாய்மாலம்!

செகசீவன் ராமுக்கு அர்ப்பணம்!

"இங்கு தி. மு. க. ஆட்சி நடக்கிறது இவர்கள் ஆட்சி செய்யும் முறையை நான் சொல்லி உங்களுக்குத் தெரியவேண் டியதில்லே. நீங்களே அனுப வித்து வருகிறீர்கள்.

(கராகோஷம்)

"இங்கு சற்று அசிரத்தையாக இருந்துவிட்டீர்கள்: எப்படியோ தி. மு. க., இங்கு ஆட்சிக்கு வந்துவிட்டது."

—'நவசக்தி': 10—6—68

தி. மு. க. அரசைப் புகழ்வதற்கு எதிர்ப் புக் காட்டும் காங்கிரசுக்காரர்களைக் கண்டிக் கும் வகையில், செகசீவன்ராம் கூறிய தாவது :—

"தமிழக அரசைப் புகழ்ந்து பேச தற்காகவா வெட்கப்படவேண்டும். 'சேரனுக்குச் சுமிரி சோழ' என்ற பேதெலலாம் நாள், அண்ணுவுடைத்தான் தொடே பேரி மூன்று நாடினேன்: என் வேண்டு கோளுக்கு அவரும் அவ்வாறே இசைந் தார். இதற்காக அவருக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்படுகிறேன்.

"அரசைப் புகழ்வதில் தவறென்ன இருக்கிறது? அரசைப் புகழ்வதன் மூலம் —பாராடுவதன் மூலம் நான் சலுகை காய்ந்ததற் செய்வதாகவே உணரு றேன்.

"நியாயமான முறையில் அமைக்கப்பட் டிருக்கும் ஓர் அரசை நல்ல ஒரு காரியத் துக்காகப் பாராடுவதில் தவறு ஏதும் இருப்பதாக நான் கருதவில்லே.

"எனவே, இவிழம் சமயம் நேரும் போது பாராட்டவே செய்வேன்."

—'இந்து': 10—6—68

மேலே தரப்பட்டவை இரண்டும், நேற்றைய இதழ்களில் வெளி வந்த இரு செய்திகள். மத்திய உணவு அமைச்சர் செகசீவன் ராம், சென்னையில் கலந்துகொண்ட நிகழ்ச்சி ஒன்றில் ஆற்றிய உரையின் வெவ்வேறு பகுதிகள் அவை.

'இரண்டுமே உண்மையாக இருக்குமா?' என்று கேட்கப்பட வேண்டியதில்லே.

முதலாவதாகத் தரப்பட்டிருக்கும் காங்கிரசு ஏட்டின் செய்தி, 'உண்மையாக இருக்கமுடியுமா' என்பதே நமது கவலே— அக்கறை!

ஆங்கில ஏட்டின் செயதியில் தவறு இருக்கமுடியாது; ஏனெனில், செகசீவன் ராம் தமிழில் பேசியிருக்க முடியாது; ஆகவே, அதன் மொழிபெயர்க்கும் அவசியமும் 'இந்து'வுக்கு நேரிடவில்லே.

காங்கிரசுப் பத்திரிகை, 'செகசீவன் ராம் பேசியதைத் தான் அப்படியே போட்டிருக்கிறோம்' என்று கூறமுடியாது; ஏனெனில், பேச்சுக்கும் பிரசுரத்துக்கும் இடையே 'மொழி பெயர்ப்பு' என்ற வேலே ஒன்று நடந்திருக்க வேண்டும்.

'இந்து' பத்திரிகையில் வந்திருக்கும் செகசீவன் ராமின் இதயம் திறந்த பேச்சுகளும்—அவரது கட்சியைச் சேர்ந்த தமிழச் செய்தித் தாளில் வந்துள்ள இங்கிதமற்ற பேச்சுகளும், தரத் தில், மலேக்கும்—மடுவுக்கும் உள்ள வேறுபாடு இருக்கிறது.

"ஒரே நேரத்தில்—ஒரே மனிதர்—ஒரே பொருள் பற்றித் தெரி வித்த கருத்துக்களிலா இத்தனே வேறுபாடு" என்ற கேள்வி, இரண்டு செய்திக் குறிப்புக்களேயும் படிப்பவருக்கு எழாமல் போகாது.

"மாற்றுக் கட்சி ஆளும் மாலித்திற்கு அதிகார முறை யில் வந்துள்ள மத்திய அமைச்சர், சொந்தக் கட்சிக்காரர் களின் திருப்திக்காக இப்படிப் பேசியிருக்கிறார்! அல்லது காங்கிரசு ஆதரன இப்படி முன்னுக்குப்பின் முரணுகச் செய்தி வெளியிட்டுள்ளதா?" என்ற ஐயப்பாட்டுக்கு மத்திய அமைச்சர் நரப்பிலிருந்தோ அல்லது காங்கிரசு தலேமையிலிருந்தோ தக்க விளக்கம் வருமா என நாம் எதிர்பார்க்கிறோம்.

மத்திய அமைச்சர்கள் பலர் கழக நிர்வாகத்தை புகழ்ந்து பாராட்டுவதும், அதைக் கண்டு மனம் பொருந்த இங்குள்ள காங்கிரசுக்காரர்கள் சிலர், அதனேர, கட்சியின் மேலிடம் வரையில் சென்று பிரச் சினையாக எழுப்புவதும் அண்மைக் காலமாக நடை பெற்றுவருங் சம்பவங்கள்!

இந்த நிலேயில், அமைச்சர் செகசீவன் ராமின் 'கராகோ ஷம்' கலந்த பேச்சு, உண்மையில் பேசப்பட்டதா அல் லது கட்சிக்காரர்களின் திருப்திக்காக 'மெருகு' கொடுக்கப்பட்டதா என்பது தெளிவாக்கப்பட வேண் டிய பிரச்சினையாகும்.

—எஸ். ஆர்.

இளமுருகு உடல் நிலே

கார் விபத்துக்குள்ளான இள முருகு அவர்களுக்கு தலேயில் பிரக் கப்பட்டு காயமெல்லாம் ஆறிவரு கின்றன.

இன்று எலும்பு முறிவுக்குள் ளான வலது கையில் முன்றவது முறையாக ரத்தப் முறிவு டார் டர் எம். கடராசன் அவர்களால் கட்டப் கட்டப்படுகிறது. எலும்பு கள் நன்கு பொருந்தியிருக்கின்றன என்று டாக்டர்கள் கூறுகிறார்கள்.

மாண்புமிகு அமைச்சர்கள் திரு. செடுஞ் செழியன், மு. கருணு நிதி, ஏ. கோவிந்தசாமி மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள்— மேலமவ உறுப்பினர்கள்— பாராளுமன்ற உறுப்பினர்கள்— பல வெளியூர் கண்பர்கள் பலரும் வந்து பார்த்து நலம் கேட்டுச் சென்றனர்.

டி. கே. சீனிவாசன்

சுற்றுப்பயணம்

ஜூன் 14: வளவனூர்; 15: மேல் பட்டாம்பாக்கம்; 16: காஞ்சி புரம்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

13-6-68

திருவள்ளூர்

ஒண்டிச்குப்பம் கருணாநிதி பொதுமன்ற ஆண்டுவிழா வும், டி. கே. பொன்னுவேலு எம்.எல்.சி. அவர்கட்குப் பாராட் டும்; மாலே 6-மணிக்கு: தலேவர்: திராவிட பாக்தர்; பேசுவோர்: அமைச்சர் செ. மாதவன், சி. வி. ரம், அண்ணுமலே எம்.எல்.ஏ., டி. கே. பொன்னுவேலு, ஏ. பரந் தாமன் பி.எஸ்சி., து. எத்தி ராசன், ஏ.கோவிந்தசாமி எம்.சி., பி. நெடுஞ்சேரன்.

கிழுசுரால்

தி. மு. க. சார்பில் இரவு 8-மணிக்கு முத்தாளம்மன் திட லில்; தலேவர்: அ. கோ. சி. தங்கபாண்டியன்; பேசுவோர்: சி. தமிழரசன் பி.ஏ., எஸ் கலிங் கன், தி. இராமசாமி, பொ. சௌந்திரபாண்டியன்.

சுத்துக்கேணி (புதுவை):

தி. மு. க. சார்பில் மாலே 6-மணிக்கு பிள்ளேயார் கோயில் திடலில்; தலேவர்: தெ. இராமு; பேசுவோர்: மதுரை கூடலரசன் எம். இராமநாதன் எம்.எல்.ஏ., எம். ஏ. சண்முகம் சு. மு. சுப்ப ராயன், க. இராமசாமி, மு. பால கிருட்டிணன்.

உள்ளக்கோட்டை

எம். ஜி. ஆர். மன்றத் திறப்பு விழா; மாலே 6 மணிக்கு வாணி லித்திலில்; தலேவர்: ப. கணே சன்; பேசுவோர்: சு. காராயண சாமி, கு. பாலகிருட்டினன், இரா. தென்னவன், கோ. சிவ குணம (கண்ணம்மா—தங்கராசு கலே நிகழ்ச்சி உண்டு.

உ. பி.-யில் வகுப்புக் கலவரம்

துப்பாக்கிச் சூட்டுக்கு மூவர் பலி

வாரணசி ஜூன் 11—

இங்கிருந்து 40 மைல தொலே வில் உள்ள காசிபுர் என்ற இடத்தில் போலீசார் துப்பாக்கி யால் சுட்டதால் மூன்று பேர் கொல்லப்பட்டனர். ஒருவர் குண் டுக் காயமடைந்தார்.

முகரம் பண்டிகை கொண்டாடு வதில் முஸ்லீம்களில் இருசாரருக் கிடையே ஏற்பட்ட தகராறினே யொட்டி 144 தடையுத்தரவு பிறப் பிக்கப்பட்டது.

தடையை மீறி ஊர்வலமும், பொதுக்கூட்டமும் நடத்த முற்பட் டனர். மாலேநேரேட், கூட்டத் தினரைக் கலேயுமாறு உத்தரவிட் டும் அவர்கள் மறத்து வ செயல் களில் ஈடுபட்டனர். போலீசு தோத்தை மீறி கலவரத்தில் ஈடு பட்டனர். இதனுல் இரு மாலேநே நிரேட்டுகளும், 25 போலீசாரும் மற்றும் இராணுவ வீரர்களும் காய டைந்தனர்.

கூட்டத்தினர், தடி, கத்தி, கம்பு போன்ற பயங்கர ஆயுதங்களே ஏந்தியிருந்ததாகவும், துப்பாக்கி ளுகுட அவர்களிடம் இருந்ததாக வும் கூறப்படுகிறது.

விசுத் தடியடியும், தோட்டா துப்பாக்கிச்சூடும் பய வாகவே துப்பாக்கிப் பிர தியோகம் கூறப்படு

முகவரி மாற்றம்

எஸ். இராகவானந்தம்

எம்.எஸ்.சி.

1, ஹிச்சன் பிளாக், அரசினர் தோட்டம், சென்னை-2.

ரோடிட முன்னேற்றக் கழகத்திற்காக, இரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களே ஆயிரமாகவும், வெலிக்கே பயாசுவும், அசிரியைராகவும் கொண்டு அழகி அச்சகத்தில் (24, சூளேராயாண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிடு வோரிடமிருந்து வெளியிடுபவர்.